# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

O.S.No.63/2020

**CNR.No.TNCB19000**

Date,28.04.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | இந்திராணி | **வயது** | 67 |
| த/பெ | ராஜசேகர் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | தோலம்பாளையம்புதூர் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 28nd April 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதி பரமேஸ்வரன் எனது சகோதரர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது சகோதரி என்றால் சரிதான். நானும் 1, 2 பிரதிவாதிகளும் சுப்பையனின் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்தில் கூட்டுச்சுவாதீனத்தில் இருந்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆமாம். பட்டா, சிட்டா என்னிடம் இல்லை. அதை நான் தாக்கல் செய்யவில்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் தோலம்பாளையத்தில் வசித்து வருவதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்திருக்கிறேன்.

நான் கூட்டு சுவாதீனத்திலும் இல்லை என்றும் பட்டா சிட்டாவும் தாக்கல் செய்யவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆதார் கார்டையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து ரங்கைய கவுடரின் கூட்டுக்குடும்ப பூர்வீக சொத்து என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். நான் சொன்னதுபோல் ரங்கைய கவுடரின் கூட்டுக்குடும்ப சொத்து என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எனது தாத்தா ரங்கைய கவுடருக்கு இரண்டு ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். என் தாத்தா ரங்கைய கவுடருக்கு எனது அப்பா சுப்பைய கவுடரும் கணபதி கவுடரும் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்து எனது பாட்டி சுப்பம்மாளுக்கும் எனது தாத்தாவுக்கும் சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். சாட்சி மீண்டும் கூட்டுக்குடும்பமாக வாங்கியதாக சொல்கிறார். எனது தாத்தாவும் பாட்டியும் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். எனது தாத்தா ரங்கைய கவுடர் உயிருடன் இருக்கும்போது தாவா சொத்தை பொறுத்து 21.01.1966 ம் தேதி மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலக பதிவு எண்.1/1966 பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் ஒன்றை எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியுமா தெரியாதா என்றால் எனக்கு தெரியாது.

எனது பாட்டி சுப்பம்மாள் தாவா சொத்தின் ஒரு பகுதியை சுயமாக விலைக்கு வாங்கி கடந்த 21.01.1966 ம் தேதி மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலக பதிவு எண்.2/1966 பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் ஒன்றை எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியுமா தெரியாதா என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட இரண்டு உயில்களையும் எழுதி வைத்த விபரம் தெரியும் என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு 1ம் பிரதிவாதி மட்டுமே ஆண் வாரிசு என்றால் சரிதான். எனது தாத்தாவும் பாட்டியும் எழுதி வைத்த உயி ல் சாசனப்படி ஆண் வாரிசுகளுக்கு மட்டுமே சேரும் என்றும் பெண் வாரிசுகள் சொத்தில் உரிமைகோர முடியாது என்று உயில் சாசனம் எழுதி வைத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

( வழக்கறிஞர் கால அவகாசம் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.